[20th September 1958

THE HON SRI R. VENKATARAMAN : மூன்று, நான்கு முறை கூடி அவர்களுடன் விவாதம் செய்திருக்கிறேம்.

SRI V. K. KOTHANDARAMAN : தொழிலாளிகளும் முதலாளிகளும் எப்படியாவது ஒரு சமரசத்திற்கு வரவேண்டும் என்று சொல்லக் கூடிய நமது அமைச்சர் அவர்கள், முதலாளிகள் விரும்புவது போல், சம்பளத்தையும் பஞ்சப் படியையும் குறைத்து ஒரு சமரசத்திற்கு வர வேண்டும் என்று விரும்புகிறார்களா ?

THE HON. SRI R. VENKATARAMAN : நான் அட்ஜுடிகேட்டராக வந்தால் பரிசீலனை செய்து ஆலோசனை சொல்லலாம். இன்றைக்கு நான் அமைச்சர் என்ற முறையில் அதற்கு ஆலோசனை கூற முடியாது.

SRI N. K. PALANISAMI : இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 500 கோடி கஜம் தான் உற்பத்தி செய்வது என்று திட்டம் இருக்கிறது. மில்களில் உற்பத்தி 500 கோடி கஜத்திற்குமேல் போகக்கூடாதென்ற முறையில் டெக்ஸ்டைல் கமிஷன் சிபார்சு செய்திருக்கிறது. அதன் அடிப்படையிலே ஏதாவது நடவடிக்கை எடுக்கப்பட்டதா ?

THE HON. SRI R. VENKATARAMAN : இப்பொழுது சமீபத்திலே அமைத்த என்க்வயரி கமிட்டியானது இனி கட்டுகளோ ஸ்பிண்டில்களாகவோ அதிகரிக்க வேண்டாம் என்று சிபார்சு செய்திருக்கிறது.

SRI M. KALYANASUNDARAM : As admitted by the Hon. Minister some time ago, is it not a fact that there is crisis in the market for finer varieties and this mill produces only finer varieties of yarn? Also is it not a fact that prices have gone up only in respect of finer varieties and if so, what is the special cause for the crisis in this mill.

THE HON. SRI R. VENKATARAMAN : That has got to be investigated. It is true that there is no crisis in respect of finer varieties. This mill produces coarse varieties also. Their difficulty is that the cost of production of coarse varieties is very much higher.

Wind-power

* 349 *Q.*—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether the Government have under consideration any proposal to start wind research with a view to use wind-power for agricultural purposes; and

(*b*) if so, the district selected for conducting the research and when it would be started?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) There is no proposal to start wind research as such. However, there is a proposal to erect a wind mill and conduct trials with it to assess the suitability of wind mills for agricultural purposes under the existing wind conditions.

(*b*) It has been provisionally proposed to install the trial wind-mill in Ramanathapuram district. The work will start after a suitable site is selected.

20th September 1958]

Sri M. KALYANASUNDARAM : ராமநாதபுரம் ஜில்லாவில் வருடம் பூராவுமே நிரந்தரமாக 6 மைல் வேகத்தில் காற்று வீசிக்கொண்டிருப்பதால், அந்த ஜில்லா இந்த ஆராய்ச்சிக்கு ஏற்ற இடம் என்றும், மின்சாரம் இல்லாமலே காற்றின் உதவியைக் கொண்டு பம்பு ஸெட்டுகளை இயக்குவதற்குரிய வாய்ப்பு அங்கே இருக்கிறது என்றும் சர்க்காருக்கு அறிக்கைகள் வந்திருக்கின்றனவா ?- அப்படியானால், அவைகள் மீது சர்க்கார் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : சர்க்காருக்குக் கிடைத்திருக்கும் 'மெடியொராலாஜிகல்' தகவலிலிருந்து, ராமநாதபுரம் ஜில்லா இந்த ஆராய்ச்சிக்கு ஏற்ற இடம் என்று தான் தெரிகிறது. ஆகவே, ராமநாதபுரம் ஜில்லாவில் இந்த ஆராய்ச்சியை நடத்தலாம் என்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது. ஆனால் ராமநாதபுரம் ஜில்லாவில் எந்த இடம் இதற்கு மிகவும் தகுதியான இடம் என்பதைக் கண்டுபிடித்துச் சொல்வதற்கு ஒரு கமிட்டியை நியமித்திருக்கிறோம். அந்தக் கமிட்டியில், (1) Director, Regional Metoerological Centre, Madras, (2) Agricultural Meteorologist, Coimbatore : and (3) Agricultural Engineer ஆகிய மூன்று பேரும் அங்கம் வகிக்கிறார்கள். அவர்கள் இந்த ஜில்லாவைச் சுற்றிப் பார்த்துத் தகுதியான இடத்தைத் தெரிந்தெடுப்பார்கள்.

Sri K. SATTANATHA KARAYALAR : தற்சமயம் இதர ஜில்லாக்களில் 'விண்ட் மில்'-கள் இல்லையா ? குறிப்பாக கன்னியாகுமரி மாவட்டத்தில் விண்ட் மில் இல்லையா ? அங்கே விண்ட் மில் இருந்தால் அது எப்படி உபயோகிக்கப்படுகிறது ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : விண்ட் மில்களினால் நாம் அடையக்கூடிய பலன்களை அனுபவபூர்வமாகக் கண்டறிவதற்காக அவைகளில் ஆராய்ச்சி நடத்தப்படத்தக்க விண்ட் மில்கள் இல்லை.

Sri N. K. PALANISAMI : விண்ட் மில்களில் ஆராய்ச்சி நடத்துவதற்கு அரசாங்கம் என்னென்ன நடவடிக்கைகள் எடுத்திருக்கிறது ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : ஆராய்ச்சி நடத்துவதற்குத் தகுந்த இடத்தைக் கண்டுபிடித்துச் சொல்வதற்கான கமிட்டி ஒன்றை நியமித்திருக்கிறோம். அக்கமிட்டி அதற்கு முயற்சி செய்துகொண்டிருக்கிறது.

Sri K. VINAYAKAM : Sir, is it not a fact that an institution of wind mill for improving the agriculture of our country is an out-moded and archaic method which will not be of any utilitarian value to our country? Why should Government waste money when we are highly developed in electricity?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : I may tell the hon. Member that the Government are not so advanced as the hon. Member thinks.

National Development Council

* 351 Q.—Sri N. K. PALANISAMI : Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether the State Government was represented at the meeting of the National Development Council held in May 1958·

(b) whether the question of starting Aluminium and Fertilizer Factories in this State was discussed;

(c) whether any decisions have been taken to raise the resources for the plan ; and

(d) if so, the details thereof?